# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 32 | 4 Pages | 02.09.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 32 | 4 பக்கங்கள் | 02.09.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மாவீரர் பூலித்தேவரின் 308வது பிறந்த நாள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து





சென்னை, செப். 2

மு.க. ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் மாவீரர் பூலித்தேவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.விடுதலைப்போராட்டத்துக்கான உணர்வைக் கிளர்ந்தெழச் செய்த மாவீரர் பூலித்தேவரின் 308வது பிறந்தநாள்.

மாவீரர் பூலித்தேவரின் 308வது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறி இருப்பதாவது:

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக இந்திய நிலப்பரப்பில் முதன்முதலில் போர்முரசம் கொட்டி, விடுதலைப் போராட்டத்துக்கான உணர்வைக் கிளர்ந்தெழச் செய்த மாவீரர் பூலித்தேவரின் 308வது பிறந்தநாள்.

அடக்க நினைத்தால் தமிழர் பொறுக்கமாட்டார், அந்நியர் ஆதிக்கத்தை அடித்து நொறுக்குவர் எனக் காட்டிய அவரது புகழ் என்றும் தமிழ் நிலத்தில் நிலைத்து நிற்கும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

## பல்லடத்தில் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் அவதி



பல்லடம், செப் 2

நெடுஞ்சாலை துறை சார்பில்,ரோடு போடப்பட்டு ரோட்டினிடையே தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. பொதுமக்கள் அங்குள்ள வணிக வளாகங்களுக்கோ, குடியிருப்புகளுக்கோ செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல்லடம் அருகே உள்ள மகாலட்சுமி நகர் பல்லடம் திருப்பூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. இங்கு நெடுஞ்சாலை துறை சார்பில்,ரோடு போடப்பட்டு ரோட்டினிடையே தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. போதிய வடிகால் வசதியின்றி அமைக்கப்பட்டுள்ளதால், மழைகாலங்களில் சிறிது நேரம் மழை பெய்தாலே மழை நீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் அங்குள்ள வணிக வளாகங்களுக்கோ, குடியிருப்புகளுக்கோ செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நெடுஞ்சாலைத் துறையினர் மழைநீர் வடிகால் வசதி செய்து, அங்கு தண்ணீர் தேங்காமல் நிற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆபத்தான மின்கம்பத்தை மாற்றி அமைக்க கோரிக்கை



பல்லடம், செப். 2

மின் கம்பம் ஒன்று, தாங்கிப் பிடிக்கும் கம்பம் மற்றும் கம்பிகளில்லாமல் நிற்கிறது. தினமும் சுமார் 3 ஆயிரம் பேர் அந்த வழியாக சென்று வருகின்றனர்.

பல்லடம் காந்தி ரோட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளது. இதன் நுழைவாயில் எதிரே அமைக்கப்பட்டுள்ள மின் கம்பம் ஒன்று, தாங்கிப் பிடிக்கும் கம்பம் மற்றும் கம்பிகளில்லாமல் நிற்கிறது. இந்த மின் கம்பத்திலிருந்து ஏராளமான மின் இணைப்புகள் செல்கின்றன. இதனால் அந்த மின்கம்பம் சாய்ந்த நிலையில் உள்ளது. எந்த நேரமும் விழும் அபாய நிலையில் உள்ள மின் கம்பத்தால் விபத்து ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அரசு கல்லூரி மற்றும் அதன் அருகிலேயே உள்ள பெண்கள், ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகள் இரண்டும் அமைந்துள்ளன. இதனால் தினமும் சுமார் 3 ஆயிரம் பேர் அந்த வழியாக சென்று வருகின்றனர். மின் கம்பம் சாய்ந்து விழும் முன் மின்வாரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெள்ளகோவில் அருகே நூல் மில்லில் திருடிய 2 பேர் கைது

வெள்ளகோவில், செப். 2

வெள்ளகோவில் அருகே உள்ள அண்ணாநகர் பகுதியை சேர்ந்த பொன்னுச்சாமி மகன் செந்தில்குமார் (வயது 42). இவர் திருச்சி கோவை ரோட்டில் வெள்ளமடை என்ற இடத்தில் வாடகை கட்டிடத்தில் கடந்த 4 ஆண்டுகளாக நூல் மில் நடத்தி வருகின்றார். சில மாதங்களுக்கு முன்பு மில்லில் தீ விபத்து ஏற்பட்டு தற்போது பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. சம்பவத்தன்று செந்தில்குமார் மில்லின் அறையை பூட்டிவிட்டு வெளியில் சென்று விட்டு மீண்டும் வந்து பார்த்தபோது மில் அறையின் பூட்டை உடைத்து அறையில் வைத்திருந்த ரூ.1 லட்சத்து 10 ஆயிரம் காணாமல் போனது தெரியவந்தது, இது குறித்து செந்தில்குமார் வெள்ளகோவில் போலீசில் புகார் செய்தார்.

புகாரின் பேரில் வெள்ளகோவில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட போது முத்தூர் அருகே சந்தேகத்தின் பேரில் இருவரை பிடித்து விசாரித்ததில் நூல் மில்லில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட வெள்ளகோவில், எம்.ஜி.ஆர் நகர்., பகுதியை சேர்ந்த முருகேசன் மகன் கருப்புசாமி , நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் பகுதியை சேர்ந்த தங்கராஜ் மகன் கவுதம் என்பது தெரியவந்தது. இருவரையும் கைது செய்து அவர்களிடம் இருந்த ரூ.30 ஆயிரத்தை கைப்பற்றி காங்கயம் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். நீதிபதி இருவரையும் சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.அதன் பேரில் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

## வெள்ளகோவில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.15 லட்சத்திற்கு சூரியகாந்தி விதை ஏலம்



வெள்ளகோவில், செப். 2

வெள்ளகோவில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரம்தோறும் செவ்வாயன்று தேங்காய் பருப்பு வியாழனன்று சூரியகாந்தி விதை ஏலம் நடைபெறும் இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கரூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை. திருப்பூர், ஈரோடு மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தேங்காய் பருப்பு மற்றும் சூரியகாந்தி விதை விற்பனைக்கு கொண்டு வருவார்கள்.

30 விவசாயிகள் கலந்து கொண்டு 315 ஆயிரத்து 876 கிலோ சூரியகாந்தி விதை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் முத்தூர், வெள்ளகோவில், காங்கேயம், ஈரோடு பகுதியை சேர்ந்த 4 வியாபாரிகள் கலந்து கொண்டு ஒரு கிலோ சூரியகாந்தி விதை அதிகபட்சமாக ரூ.49.91க்கும், குறைந்தபட்சம் ரூ.44.89க்கும் கொள்முதல் செய்தனர்.

மொத்தம் ரூ.15லட்சத்து 2ஆயிரத்து 723க்கு வணிகம் நடைபெற்றது. இத்தகவலை வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## 2024 தேர்தலுக்கு ஆயத்தமாகும் எதிர்கட்சி கூட்டணி: பல்வேறு பணிகளுக்கு குழுக்கள் அமைப்பு




மும்பை, செப். 2

இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் பாராளுமன்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளும் மும்முரமாக தங்களை தயார்படுத்தி வருகின்றன. ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை வீழ்த்தவும், குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகவும் காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உட்பட 26 கட்சிகள், இந்தியா (I.N.D.I.A.) எனும் பெயரில் ஒரு பிரமாண்ட கூட்டணியை அமைத்துள்ளன. இந்த கூட்டணியின் முதல் சந்திப்பு கூட்டம் கடந்த ஜூன் 23 அன்று பீகார் மாநில தலைநகர் பாட்னாவிலும், இரண்டாவது சந்திப்பு கூட்டம் கர்நாடக மாநில தலைநகர் பெங்களூருவில் ஜூலை 17, 18 ஆகிய தேதிகளிலும் நடைபெற்றது. இந்நிலையில் இந்த கூட்டணியின் அடுத்த சந்திப்பு மகாராஷ்டிரா தலைநகர் மும்பையில் நடைபெற்றது. கூட்டணி கட்சிகளின் தொகுதி பங்கீடுகள், கூட்டு செயல் கமிட்டிகள் அமைத்தல், கூட்டணியின் இலச்சினையை மக்களிடம் அறிமுகப்படுத்துதல், கூட்டணியின் கொள்கைகள் மற்றும் குறைந்தபட்ச செயல் திட்டங்கள் வகுத்தல், ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு எதிராக இந்தியா முழுவதும் செயல்படுத்த வேண்டிய வியூகம், எந்தெந்த கட்சிக்கு எத்தனை இடங்கள் உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுப்பதற்காக இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் பல்வேறு மாநிலங்களை சேர்ந்தவையாக இருப்பதாலும், தலைவர்களுக்கிடையே கருத்து மோதல்கள் தோன்றாமல் இருக்கும் வகையிலும், தேர்தலுக்கு கூட்டணியை வழிநடத்த 13பேர் கொண்ட ஒருங்கிணைப்பு கமிட்டியை இந்த கூட்டணி அறிவித்துள்ளது. அதே போன்று கூட்டணியில் உள்ள கட்சிகளில் இருந்து 11பேர் அடங்கிய சமூக வலைதளங்களுக்கான பணிக்குழுவும், 18பேர் அடங்கிய பிரச்சார கமிட்டியும், 16பேர் கொண்ட ஊடக பணிக்குழுவும், 10பேர் கொண்ட தேர்தல் திட்டங்களுக்கான ஆராய்ச்சி பணிக்குழுவும் அமைத்துள்ளது. இவையனைத்திலும், மேலும் ஒருவராக திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஒரு உறுப்பினர் பின்னர் சேர்க்கப்படுவார் என எதிர்கட்சி கூட்டணி தெரிவித்துள்ளது.

## நாக்பூர் பல்கலைக்கழக முதுகலை படிப்பில் பா.ஜனதா கட்சி வரலாறு சேர்ப்பு



நாக்பூர், செப். 2

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள நாக்பூர் பல்கலைக்கழக எம்.ஏ. வரலாறு பாடத்திட்டத்தில் பாரதிய ஜனதா கட்சியின் வரலாறு மற்றும் ராம ஜென்ம பூமி இயக்க வரலாறு ஆகியவற்றை சேர்க்க பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது. அதே சமயம் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் இந்தியா கூட்டணியில் உள்ள தி.மு.க பற்றிய பகுதிகளை நீக்க முடிவு செய்துள்ளது. அதற்கு பதிலாக ஏற்கனவே இடம் பெற்று இருந்த கம்யூனிஸ்டு கட்சி வரலாறு மற்றும் இந்தியா கூட்டணியில் உள்ள தி.மு.க உள்ளிட்ட பல்வேறு மாநில கட்சிகளின் வரலாற்றை நீக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் சில மாநில கட்சிகளின் வரலாற்றை சேர்க்கவும் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. முதுகலை வரலாறு பாடத்தின் 4வது செமஸ்டரில் இந்த பாடத்திட்டங்கள் இடம் பெற உள்ளன. இந்த நிலையில் கம்யூனிஸ்டு மற்றும் தி.மு.க பற்றிய பாடப்பகுதிகள் நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த முடிவுக்கு மகாராஷ்டிரா மாநில எதிர்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளன. மேலும் கல்வியாளர்கள் மற்றும் வரலாற்று ஆசிரியர்களும்பல்கலைக்கழகத்தின்இந்தநடவடிக்கையைகண்டித்துள்ளனர். பாடத்திட்டத்தை காவிமயமாக்க நடக்கும் முயற்சி என்று அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## அடுத்த இலக்கு ககன்யான் திட்டம்: இஸ்ரோ தலைவர் தகவல்




இஸ்ரோ, செப். 2

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ உலகிலேயே முதல்முறையாக எந்த நாடும் செய்யாத சாதனையாக நிலவின் தென் துருவத்தை தொடும் முயற்சியில் சந்திரயான்3 எனும் விண்கலனை அனுப்பி வெற்றி பெற்றது. சந்திரனில் பெற்ற வெற்றியை அடுத்து சூரியனை ஆய்வு செய்ய ஒரு விண்கலனை உருவாக்கி அனுப்பும் முயற்சியை இஸ்ரோ மேற்கொண்டு வந்தது. அதன் தொடர்ச்சியாக ஆதித்யா எல்1 என பெயரிடப்பட்டிருக்கும் இந்த விண்கலம், நாளை காலை 11:50 மணிக்கு சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.விசி57 (PSLVC57) ராக்கெட் மூலம் ஏவப்படுகிறது. இந்நிலையில், ஆதித்யா எல்1 விண்கலம் நாளை விண்ணில் ஏவப்படவுள்ளதை முன்னிட்டு, ஆந்திர மாநிலம் திருப்பதியில் உள்ள செங்காலம்மா பரமேஸ்வரி கோவிலில் இஸ்ரோ தலைவர் சோமநாத் சாமி தரிசனம் செய்தார். சாமி தரிசனத்துக்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த இஸ்ரோ தலைவர் சோமநாத், "ஆதித்யா எல்1க்கு பிறகு, எங்களின் அடுத்த இலக்கு ககன்யான் திட்டம். இதன் பணிகள் அக்டோபர் முதல் வாரத்தில் தொடங்கப்படும்." சந்திரயான்3 தொடர்பான லேண்டர், ரோவர் நிலவில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது என்றார்.

# 'பொதுமக்கள் தரும் மனுக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவுங்கள்' உதயநிதி ஸ்டாலின் அதிகாரிகளுக்கு வேண்டுகோள்

சென்னை, செப். 2

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின்திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடத்தினர். அப்போது பல்வேறு துறைகள் சார்பாக 912 பயனாளிகளுக்கு ரூ.35.83 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: முதல்வரின் முகவரியில் தரப்படும் மனுக்களுக்கு தரமான பதில்கள் தருவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்து உள்ளது. மக்கள் தங்கள் கோரிக்கைகளை குறைகளை மனுக்கள்



மூலமாகத் தான் தெரிவிப்பார்கள். இந்த மனுக்களின் மீது குறித்த காலத்திற்குள் பதில் அளிக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். மனுக்களுக்கு பதில் தந்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தில் இல்லாமல் உங்கள் துறைக்கானது அல்ல என்று தெரிந்தாலும் அந்த நபருக்கு வேறு ஏதேனும் வகையிலாவது உதவலாம் என்று மனிதாபிமானத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு உதவுங்கள். குறிப்பாக ஏழை எளிய மக்கள், மாற்றுத் திறனாளிகள் பெண்கள் ஆகியோர் தரும் மனுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை செயலாளர் தாரேஷ் அகமது, மாவட்ட கலெக்டர் ஆல்பிஜான் வர்கீஸ், ஆவடி போலீஸ் கமிஷனர் சங்கர், ஜெகத் ரட்சகன் எம்.பி., முன்னாள் அமைச்சர் ஆவடி நாசர், போலீஸ் சூப்பிரண்டு சீபாஸ் கல்யாண், எம்.எல்.ஏ.க்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, எஸ்.சந்திரன், சுதர்சனம், டி.ஜெ.கோவிந்தராஜன், கணபதி, துரை சந்திரசேகர், மாவட்ட ஊராட்சித் தலைவர் உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அதிகாரி ராஜ் குமார், கூடுதல் கலெக்டர் சுகபுத்ரா, ஆவடி மாநக ராட்சி ஆணையர் தர்பக ராஜ், பொன்னேரி சப்கலெக்டர் ஐஸ்வர்யா ராம நாதன், துணை கமிஷனர் ஜெயலட்சுமி இளங்கோ கலந்து கொண்டனர்.

# நீட் தேர்வை ஒழிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை: உதயநிதி ஸ்டாலின் டுவிட்டர் பதிவு

சென்னை, செப். 2

நீட் ஒழிப்புப் போராளி தங்கை அனிதா நம்மை விட்டுப் பிரிந்து இன்றோடு வருடங்கள் ஆறு ஆகின்றன. ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் தங்கை அனிதாவை நீட் தேர்வு கொலை செய்த வடு நம் மனதில் என்றும் இருக்கும்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறி இருப்பதாவது: நீட் ஒழிப்புப் போராளி தங்கை



அனிதா நம்மை விட்டுப் பிரிந்து இன்றோடு வருடங்கள் ஆறு ஆகின்றன. ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் தங்கை அனிதாவை நீட் தேர்வு கொலை செய்த வடு நம் மனதில் என்றும் இருக்கும்.

நீட் எனும் சமூக அநீதிக்கு எதிராக இறுதி வரை போராடிய தங்கை அனிதா மறைந்த இந்நாளில், ஓர் அண்ணனாக அவரை நினைவு கூர்கிறேன். நீட்டை நிரந்தரமாக நீக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

அந்த நாள் நிச்சயம் வரும். நீட்டை ஒழித்துக் கட்டுவோம்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# திருப்பூர் தண்ணீர்பந்தல் ஸ்ரீ விநாயகர் கோவில் கும்பாபிஷேக ஆண்டு விழா

திருப்பூர், செப். 2

விழாவில் கணபதி ஹோமம், 108 தாமரை மகாலட்சுமி, 108 மூலிகை தன்வந்திரி ஆகியவை வைத்து ஹோம பூஜைகள் செய்யப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது.

திருப்பூர் அவிநாசி ரோடு தண்ணீர் பந்தல் காலனியில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ பாலமுருகன், ஸ்ரீ கன்னிமார் ,கருப்பராயன், ஸ்ரீ ஆதிபராசக்தி ஆகிய



கோவில்கள் உள்ளது. இந்த கோவிலில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

முதலாம் ஆண்டு விழா நேற்று முதல் தொடர்ந்து நடைபெற்றது. விழாவில் கணபதி ஹோமம், 108 தாமரை மகாலட்சுமி, 108 மூலிகை தன்வந்திரி ஆகியவை வைத்து ஹோம பூஜைகள் செய்யப்பட்டது.

மேலும் மூலவர் மூர்த்திகளுக்கு சிறப்பு அலங்கார பூஜை, பௌர்ணமி பூஜை உள்ளிட்டவை நடைபெற்றது. விழாவில் திரளான பக்தர்கள்கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது.

# கைத்தறி மூலப்பொருள் சந்தை விலையை அரசே நிர்ணயிக்க வேண்டும்

கோவை, செப்.2

சி.ஐ.டி.யூ தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர்சம்மேளனம் வலியுறுத்தல் கைத்தறி நெசவுத் தொழில் நலிவடையும் மாதங்களில் அரசு நிவாரணம் வழங்கவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேட்டுப்பாளையம் பகுதியில் சி.ஐ.டி.யூ தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளன மாநில குழுக்கூட்டம் சிறுமுகையில் நடைபெற்றது. திருப்பூர் மாவட்ட செயலாளர் கனகராஜ் தலைமை வைத்தார். மாநில பொதுச் செயலாளர் முத்துக்குமார், மாவட்டத் தலைவர் சிங்காரவேலு, கோவை மாவட்ட செயலாளர் இ.என்.ராஜகோபால் முன்னிலை வைத்தனர். மாவட்ட பொருளாளர்



டி.ஆர்.ராமசாமி வரவேற்றார். காஞ்சிபுரம், கடலூர், பரமக்குடி, தேனி, கோவை, திருப்பூர் உள்ளிட்ட 15 மாவட்டங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் கைத்தறி சேலை ரகங்களை விசைத்தறியில் நெய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். மீறி செயல்படும் விசைத்தறிகளை பறிமுதல் செய்ய வேண்டும். கைத்தறி சேலைகளின் மூலப் பொருட்களான பட்டு நூல், நூல் ஜரிகை ஆகியவற்றின் சந்தை விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும். நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட தொடக்க நெசவாளர் கூட்டுறவு வங்கி தொடங்க வேண்டும். கைத்தறி நெசவாளர்கள் அனைவருக்கும் நிரந்தர அடையாள அட்டை வழங்க வேண்டும். கைத்தறி நெசவுத் தொழில் நலிவடையும் மாதங்களில் அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும். கைத்தறி சேலைகளை சாமானியரும் வாங்குவதற்கு ஏதுவாக ஜி.எஸ்.டி வரிவிலக்கு அளிக்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு வழக்கத்தில் இருந்த மருத்துவ திட்டத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. முடிவில் கோவை மாவட்ட தலைவர் பரமேஸ்வரன் நன்றி கூறினார்.

# தாராபுரத்தில் அனிதாவிற்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி

தாராபுரம், செப். 2

அனிதா நீட் தேர்வில் தோல்வியடைந்ததால் தற்கொலை செய்து கொண்டார். அனிதாவிற்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நீட் தேர்வில் தோல்வியடைந்ததால் தற்கொலை செய்து கொண்ட அனிதாவிற்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி தாராபுரம் பெரியார் சிலை அருகே நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தாராபுரம் தி.மு.க. செயலாளர் முருகானந்தம் மற்றும் நகர் மன்ற தலைவர் பாப்பு கண்ணன்,ஒன்றிய குழு தலைவர் செந்தில் குமார் , மாவட்ட வக்கீல் அணி செயலாளர் செல்வராஜ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் குகன் , நகர அவைத்தலைவர் கதிரவன், கவுன்சிலர் கண்ணன், வின்னர் ஸ்ரீதர், முன்னாள் எம்.எல்.ஏ., பிரபாவதி பெரியசாமி, மாவட்ட மாணவரணி



துணை அமைப்பாளர் சிலம்பரசன் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், பேரூர் செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கடலூர் எஸ்.பி. அலுவலகத்தில் பெட்ரோல் ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயற்சித்த வாலிபர்

கடலூர், செப்.2

புகார் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல் பெட்ரோலை எடுத்து தன் மீது ஊற்றிக்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்.

கடலூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் இன்று காலை வாலிபர் ஒருவர் வந்திருந்தார். திடீரென்று தான் மறைத்து வைத்திருந்த பாட்டிலில் இருந்த பெட்ரோலை எடுத்து தன் மீது ஊற்றிக்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்.

அப்போது அங்கு இருந்த போலீசார் இதனை



பார்த்து அதிர்ச்சி அடைந்து அந்த நபரிடம் இருந்த பாட்டிலை பறிமுதல் செய்து அவர் மீது தண்ணீர் ஊற்றினர். பின்னர் அந்த நபரிடம் விசாரணை மேற்கொண்ட போது, கடலூர் மாவட்டம் காட்டு மன்னார்கோவில் பகுதியை சேர்ந்தவர் ஆனந்த்பாபு. இவர் வெளிநாட்டில் வேலை செய்து கடந்த சில வருடங்களுக்கு முன்பு தனது சொந்த ஊரான காட்டுமன்னார் கோயில் பெரியார் நகர் பகுதியில் வீடு கட்டியுள்ளார். அப்போது அதே பகுதியைச் சார்ந்த நபர் ஒருவர் அவரது வீட்டின் அருகே உள்ள பொதுப் பாதையில் இருந்த ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி அவரிடம் தெரிவித்த போது ஆட்கள் வைத்து மிரட்டுவதாக போலீஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவல கத்திலும், பரபரப்பு ஏற்பட்டது.

# காங்கேயம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.79.80 லட்சம் மதிப்பில் திட்டப்பணிகள்

காங்கயம், செப். 2

திட்டப்பணிகளை விரைவாக முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நடைபெற்று வரும் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.79.80 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளை கலெக்டர் கிறிஸ்துராஜ் ஆய்வு செய்தார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் திருப்பூர் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். இந்ததிட்டப்பணிகள் பொதுமக்களுக்கு முழுமையாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் ஆய்வுபணிகள்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்



பட்ட நடைபெற்று வரும் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பாப்பினி ஊராட்சியில் அனைத்துக்கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.12.94 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வேளாண் பொருட்கள் சேமிப்பு கிடங்கினையும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.1.81 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமூக சுகாதார வளாகத்தையும், பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.2.40 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீட்டையும் ஆய்வு செய்தனர். மேலும் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.57.47 லட்சம் மதிப்பீட்டில் ஈரோடு தாராபுரம் சாலை முதல் மடவிளாகம் வழியாக நட்டார்பாளையம் சாலை வரை தார் சாலை மேம்பாட்டுப் பணியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.2.59 லட்சம் மதிப்பீட்டில் வரதப்பம்பாளையத்திலிருந்து தொட்டியபட்டி வரை இருபுறமும் சங்கன் பிட் அமைக்கும் பணியினையும், ரூ.2.59 லட்சம் மதிப்பீட்டில் பி.பச்சாபாளையம் முதல் பகவதி பாளையம் வரை இருபுறமும் சங்கன் பீட் அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூ.79.80 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திட்டப்பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

அப்போது காங்கேயம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஷ்குமார், காங்கேயம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விமலாவதி, ஹரிகரன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# பொதுமக்களை விரட்டி கடிக்கும் தெருநாய்கள்

திண்டுக்கல், செப். 2

தெரு நாய்கள் சாலையின் குறுக்கே திடீரென வருவதால் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்குகின்றன. மேலும் தெருக்களில் விளையாடும் குழந்தைகளையும் விரட்டுகின்றன. சாலைகளில் சுற்றிதிரியும் நாய்களை பிடித்து கட்டுப்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திண்டுக்கல் மாநகராட்சி யாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் பல்வேறு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இருந்தபோதும் சாலையில் கால்நடைகள், நாய்கள் சுற்றித்திரிவதை கட்டுப்படுத்த முடியவில்லை. குறிப்பாக கூட்டம், கூட்டமாக சுற்றித்திரியும் தெருநாய்கள் பொது மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. சாலையின் குறுக்கே திடீரென வருவதால் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்குகின்றன. மேலும் தெருக்களில்



விளையாடும் குழந்தைகளையும் விரட்டுகின்றன.

குறிப்பாக அதிகாலை மற்றும் இரவு நேரத்தில் சாலையில் நடந்து செல்பவர்களை விரட்டி கடிக்கின்றன. இதனால் பொது மக்கள் பீதி அடைந்துள்ளனர். தெரு நாய்களை பிடித்து மாநகராட்சி ஊழியர்கள் கருத்தடை செய்தனர்.

இதனால் சற்று குறைந்திருந்த நாய்கள் தொல்லை தற்போது மீண்டும் அதிகரித்துள்ளது. நாகல்நகர், பஸ் நிலையம், ஆர்.எம். காலனி, ரெயில் நிலையம், பாரதிபுரம், சந்தைபேட்டை, பழனிசாலை உள்பட நகரின் முக்கிய வீதிகளில் சுற்றி திரிகின்றன.

இதனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர்.

சில தெருநாய்கள் காயங்களுடன் சுற்றி திரிவதால் பொது மக்களுக்கு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே சாலைகளில் சுற்றிதிரியும் நாய்களை பிடித்து கட்டுப்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கோவிலை சுற்றி பார்க்க சென்ற கல்லூரி மாணவர் ஏரியில் மூழ்கி பலி

அரியலூர், செப். 2

அரியலூர் கல்லக்குடி தெருவை சேர்ந்தவர் சங்கர். இவருடைய மகன் சபரிவாசன் (வயது 19). இவர் கீழப்பழூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 3ம் ஆண்டு மெக்கானிக்கல் படித்து வந்தார். இவர் தனது நண்பர்களான அரசு (20), சக்தி (20), கோகுலக்கண்ணன் (21), சூரியா (20), ஹரிஹரன் (17), சரவணகுமார் (19) ஆகியோருடன் உடையார்பாளையம் அருகே மீனாட்சி ராமசாமி பாலிடெக்னிக் கல்லூரியில் 3 நாள் பயிற்சி வகுப்பை முடித்து விட்டு உடையார்பாளையம் பெரியகோவிலை சுற்றி பார்க்க சென்று உள்ளனர். அப்போது அங்குள்ள பெரிய ஏரியில் அரசு, சக்தி ஆகியோர் குளித்தனர். பின்னர் அவர்கள் 2 பேரும் ஏரியின் நடுவில் அமைந்துள்ள நீராவி மண்டபத்துக்கு சென்று உள்ளனர். அதை பார்த்த சபரிவாசனும் குளிக்க ஆசைப்பட்டு ஏரியில் குதித்து நீராவி மண்டபத்துக்கு பாதி தூரம் சென்றுள்ளார். அப்போது அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு தண்ணீரில் மூழ்க தொடங்கினார். இதனை கண்டு அதிர்ச்சியடைந்த அரசு மற்றும் சக்தி ஆகியோர் சபரிவாசனை காப்பாற்ற முயன்றனர்.

ஆனால் அதற்குள் அவர் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த உடையார்பாளையம் இன்ஸ்பெக்டர் தனபாலன்ஜெயங்கொண்டம்தீயணைப்புதுறையினருக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சபரிவாசனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து உடையார்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மண்டல அளவிலான செஸ் போட்டி

பெரம்பலூர், செப். 2

பெரம்பலூரில் மண்டல அளவிலான செஸ் போட்டி துறையூர் புறவழிச்சாலையில் உள்ள தனியார் பப்ளிக் பள்ளியில் நடைபெற்றது. இதில் பெரம்பலூர், அரியலூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். 8, 10, 12, 15, 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு திறமையுடன் காய்களை நகர்த்தி விளையாடினார்கள். போட்டிக்கான ஏற்பாடுகளை பள்ளி முதல்வர் தலைமையில் உடற்கல்வி ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

# கட்டண உயர்வை கண்டித்து கப்பலூர் சுங்கச்சாவடியில் முற்றுகை போராட்டம்

மதுரை, செப். 2

மதுரை மாவட்டம் கப்பலூரில் அமைந்துள்ள சுங்கச்சாவடியில் உள்ளூர் வாகனங்களுக்கு விலக்கு அளிக்கக்கோரிதொடர்ந்து வியாபாரிகளும், பொது மக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனால் அடிக்கடி சுங்கச்சாவடி ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. இதற்கு நிரந்தர தீர்வாக கப்பலூர் சுங்கச்சாவடியை அகற்ற வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. இதுதொடர்பாக வியாபாரிகள், டிரைவர்கள், பொது மக்கள், போராட்டம், மறியல், கடையடைப்பு போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.



மத்திய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரியிடமும், கப்பலூர் சுங்கச்சாவடியை அகற்ற கோரி மனுவும் அளிக்கப்பட்டது. இந்தநிலையில் சுங்கச்சாவடி கட்டண உயர்வை மத்திய அரசு அறிவித்தது.

அதன்படி தமிழகத்தில் உள்ள சுங்கச்சாவடிகளில் கட்டணஉயர்வுஅமலுக்கு வந்தது. இதற்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர். கட்டண உயர்வை ரத்து செய்யக்கோரி கப்பலூர் சுங்கச்சாவடியை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இன்று இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாநிலத்தலைவர் சிங்காரவேலன் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் மத்திய அரசை கண்டித்தும், கட்டண உயர்வை ரத்து செய்யக்கோரியும் கோஷம் எழுப்பினர். முற்றுகை காரணமாக சுங்கச்சாவடியை கடந்து செல்ல முடியாமல் வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

இதுகுறித்து தகவல் அறிந்த திருமங்கலம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் பலனில்லை.

இதையடுத்து மறியலில் ஈடுபட்டவர்களை போலீசார் அப்புறப்படுத்த முயன்றனர்.

அப்போது அவர்களுக்கும், போராட்டக்காரர்களுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் ஒருவர் காயமடைந்தார். சிலர் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். இதையடுத்து முற்றுகையில் ஈடுபட்ட 70 பேரை போலீசார் கைது செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# ஊட்டியில் 3 மணி நேரம் கொட்டிய கனமழை நீரில் மூழ்கிய காய்கறி தோட்டங்கள்

ஊட்டி, செப். 3

வானில் கருமேகங்கள் சூழ்ந்து வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது. மலைப் பயிர்களை அதிக பரப்பளவில் பயிரிட்டு உள்ளனர்.

தமிழகத்தில் வளிமண்டல சுழற்சி காரணமாக மாநிலத்தின் ஒருசில பகுதிகளில் கனமழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவிப்பு வெளியிட்டு இருந்தது. அதன்படி மாநிலத்தின்பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் நேற்று மதியம் வரை வெயில் வாட்டி வதைத்தது.



அதன்பிறகு வானில் கருமேகங்கள் சூழ்ந்து வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது. இதனை தொடர்ந்து ஊட்டி மற்றும் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. இது சுமார் 3 மணி நேரம் வரை நீடித்தது.

ஊட்டியில் கனமழை காரணமாக சாலைகளில் வெள்ளம் கரைபுரண்டோடியது. இதனால் வாகனங்கள் தட்டுத்தடுமாறி தண்ணீரை பீய்ச்சி அடித்தபடி சென்றது. பள்ளி முடிந்து வீடு திரும்பிய மாணவமாணவிகள் அவதிக்கு உள்ளாகினர். கோத்தகிரி, குந்தா, கெத்தை, பாலகொலா உள்ளிட்ட பகுதிகளில் பலத்த மழை காரணமாக ஓடை வாய்க்கால்களில் வெள்ளம் கரைபுரண்டது. அப்போது அங்கு திடீர் அடைப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக மழை வெள்ளம் விளைநிலங்களுக்குள் புகுந்தது. அந்த பகுதியே வெள்ளக்காடாக காட்சிஅளிக்கிறது. ஊட்டி, கோத்தகிரி, குந்தா, கெத்தை உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் கேரட், பூண்டு, உருளைக்கிழங்கு, பீட்ரூட் உள்ளிட்ட மலைப்பயிர்களை அதிக பரப்பளவில் பயிரிட்டு உள்ளனர். அங்கு உள்ள விளைநிலங்களை மழை வெள்ளம் சூழ்ந்து நிற்கிறது. இதனால் பயிர்கள் அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தகவல் அறிந்து வந்த நகராட்சி, ஊராட்சி ஊழியர்கள், நீர் வரத்து கால்வாய் ஓடையில் ஏற்பட்டு உள்ள அடைப்புகளை உடனடியாக அகற்றி தூர்வாரும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# சேலத்தில் விநாயகர் சிலைகள் விற்பனைக்கு குவிப்பு

சேலம், செப். 2

விநாயகர் சதுர்த்தி விழா வருகிற 18ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி சேலம் மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட பல்வேறு அமைப்புகள் மற்றும் பொது மக்கள் தயாராகி வருகிறார்கள்.

விநாயகர் சதுர்த்தி விழா வருகிற 18ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி சேலம் மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட பல்வேறு அமைப்புகள் மற்றும் பொது மக்கள் தயாராகி வருகிறார்கள். விநாயகர் சதுர்த்தி விழா விநாயகர் சதுர்த்தி விழாவில், விநாயகருக்கு கொழுக் கட்டை, அவல், சுண்டல், சர்க்கரை பொங்கல், கரும்பு, பழங்களை வைத்து பக்தர்கள் படையலிடு வார்கள். தொடர்ந்து 2 நாட்கள் சிறப்பு பூஜைகள் செய்து விநாயகர் சதுர்த்திவிழா கோலாகலமாக கொண்டாடப்படும். 3வது நாளில் விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு நீர்நிலைகளில் விஜர்சனம் செய்யப்படும். இந்த நாட்களில் விநாயகர் ஊர்வலம் சேலம் மற்றும் புறநகர் பகுதிகளில் அதிக அளவில் நடைபெறும். இதையொட்டி கூடுதல் போலீசார் பாது காப்பு பணியில் ஈடுபடு வார்கள். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், மேட்டூர், ஓமலூர், சேலம் நெய்க்காரப்பட்டி உள்பட பல பகுதிகளில் விநா யகர் சிலைகள் அதிக அளவில் தயார் செய்யப்படு கிறது. இந்த சிலைகள் சேலம் 2வது அக்ரஹாரம், அஸ்தம்பட்டி, அடிவாரம், குரங்குச்சாவடி, கடை வீதி, தேர்நிலையம், குகை, கொண்டலாம்பட்டி, ஓமலூர், வாழப்பாடி, ஆத்தூர், மேச்சேரி, மேட்டூர் உள்பட பல பகுதிகளி லும் சாலையோரம் விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டுள்ளன. தற்போது விநாயகர் சிலைகள் விற்பனை தொடங்கி உள்ளது. கடைசி 2 நாட்களில் விநாயகர் சிலைகள் விற்பனை சூடுபிடிக்கும் என்பதால் அதிக அளவில் சிலைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. 10 ஆயிரம் வரை அரை அடி உயரம் முதல் 10 அடி உயரம் வரை உள்ள இந்த சிலைகள் 100 ரூபாய் முதல் 10 ஆயிரம் வரை விற்கப்படுகிறது. இதில் லட்சுமி நாராயண விநாயகர், லிங்கம் ராஜ அலங்காரம், நாகலிங்கம், கஜமுகம், ருத்ரமூர்த்தி, சிவ நர்த்தனம், மான், அன்னம், மயில், சிங்க வாகனம், அனுமன், நரசிம்மர், சித்தி, புத்தி ராஜ கணபதி உள்பட பல வடி வங்களில் சிலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

# சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி

நெல்லை, செப்.2

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு எய்ட்ஸ் மற்றும் போதை தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான கல்லூரி மாணவர்களுக்கான மாரத்தான் போட்டிகள் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில் பாளையில் நடத்தப்பட்டது.

போட்டியில் நெல்லை, தென்காசி மாவட்டங்களில் உள்ள பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவமாணவிகள் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். 5 கிலோமீட்டர் தூரம் வரை நடைபெற்ற இந்த போட்டியில் ஆண்கள்,

பெண்கள் என தனித்தனியாக போட்டிகள் நடத்தப்பட்டது. மாராத்தான் போட்டிகளை நெல்லை மாவட்ட பயிற்சி கலெக்டர் கிஷன் குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்தில் தொடங்கிய மாரத்தான் போட்டிகள் மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலக பிரிவு, நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நெல்லை சரக டி.ஐ.ஜி. அலுவலகம் வழியாக சீனிவாச நகர் பாலம் வரை சென்று மீண்டும் தொடங்கிய இடத்தில் நிறைவு பெற்றது. 5 கிலோமீட்டர் பயணத்தை கல்லூரி மாணவ மாணவிகள் ஓடி நிறைவு செய்தனர். மாணவர்கள் பிரிவில் நடைபெற்ற போட்டியில் ஜான்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் முதல் பரிசையும், மாணவிகள் பிரிவில் நடைபெற்ற போட்டியில் சாரா டக்கர் கல்லூரியை சேர்ந்த மாணவி முதல் பரிசையும் பெற்றனர். முதல் பரிசாக ரூ.10 ஆயிரம் ரொக்க பணமும், 2ம் பரிசாக ரூ.7 ஆயிரம் ரொக்க பணமும், 3ம் பரிசாக ரூ.5 ஆயிரம் ரொக்க பணமும் வழங்கப்பட்டது. போட்டிகளில் கலந்து கொண்ட தலா 7 பேருக்கு சிறப்பு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நெல்லை மாவட்ட சுகாதார பணிகள் இணை இயக்குனர் ராஜேந்திரன் உள்ளிட்ட விளையாட்டு துறை அதிகாரிகள் சுகாதாரத்துறை அதிகாரிகள் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# பண்ணாரி சோதனை சாவடி அருகே உலாவரும் காட்டு யானைகள்

ஈரோடு, செப். 2

பண்ணாரி சோதனை சாவடி அருகே இரவு நேரங்களில் யானை கூட்டம் உலா வருகின்றன. லாரிகளை வழிமறித்து கரும்புகளை சாப்பிட்டு வருகின்றன.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் 10 வனச்சரகங்கள் உள்ளன. இங்கு யானை, புலி, சிறுத்தை, கரடி, காட்டெருமை, மான்கள் உள்பட ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. இந்நிலையில் சத்தியமங்கலம் அடுத்த பண்ணாரி சோதனை சாவடி அருகே கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் யானை கூட்டம் உலா வருகின்றன. பண்ணாரி சோதனை சாவடி அருகே கர்நாடகாவில் இருந்து தமிழகத்துக்கு தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. இதைப்போல் தமிழகத் தில் இருந்தும் கர்நாடகாவு க்கு வாகனங்கள் சென்று வருகின்றன. இதில் கரும்பு களை ஏற்றி சென்று வரும் லாரிகளை கடந்த சில நாட்களாக யானை கூட்டங்கள் வழிமறித்து கரும்புகளை தின்று வருவதை தொடர்கதையாகி வருகிறது. கரும்பு கட்டுடைகளை ஏற்றி வரும் லாரி டிரைவர்கள் சில நேரம் பாரங்கள் அதிகமாக இருப்பதால் வனப் பகுதியில் உள்ள சாலையோரம்கரும்புகட்டுகளை தூக்கி வீசி விட்டு சென்று விடுகின்றனர். இதனால் அந்த வழியாக செல்லும் யானைகள் கரும்புகளை தின்று பழக்கப்ப ட்டதால் அதன் காரணமாக தினமும் அந்த பகுதியில் யானைகள் வருகின்றன. கரும்புகளை ஏற்றி வரும் லாரிகளுக்காக யானைகள் காத்திருக்கின்றன. பின்னர் கரும்புகளை ஏற்றி வரும் லாரிகளை வழிமறித்து கரும்புகளை சாப்பிட்டு வருகின்றன. இதனால் இந்த வழியாக இரவு நேரங்களில் செல்லும் வாகன ஓட்டிகள் அந்தப் பகுதியை கடந்து செல்ல அச்சப்படுகின்றனர். இது குறித்து வனத்து றையினர் கூறும் போது, பண்ணாரி சோதனை சாவடி அருகே கடந்த சில நாட்களாக இரவு நேர ங்களில் யானை கூட்டம் உலா வருகின்றன. கரும்பு கட்டுகளை சாப்பிடுவதற்காக யானைகள் வருகின்றன. எனவே இரவு நே ங்க ளில் வரும் வாகன ஓட்டிகள் கவனத்துடன் இருக்க வே ண்டும். தேவையி ல்லாமல் சாலையில் இறங்கி நடமாட வேண்டாம். அதைப் போல் யானை கூட்டங்களை செல்போனில் படம் எடுக்கக் கூடாது என எச்சரித்தனர்.



# வாலாஜாபாத் அருகே மனைவியின் தலையில் அம்மிக்கல்லை போட்டு கொன்ற கணவர்

காஞ்சிபுரம், செப். 2

விசாரணையில் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு கொலை செய்ததாக ஸ்ரீதர் போலீசாரிடம் தெரிவித்து உள்ளார். நடத்தை சந்தேகத்தில் தூங்கிய மனைவி மீது அம்மிக்கல்லை போட்டு கணவர் கொலை செய்த சம்பவம்பரபரப்பைஏற்படுத்தி உள்ளது.

வாலாஜாபாத் அருகே உள்ள சங்கராபுரம் பகுதியை சேர்ந்தவர் ஸ்ரீதர் (வயது45). கல் குவாரியில் தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி செல்வராணி(35). இவர்களுக்கு 2 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். ஸ்ரீதர் மதுகுடித்து வந்து மனைவியிடம் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்தார். இதனால் கணவன்மனைவி இடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று இரவும் மதுபோதையில் வந்த ஸ்ரீதர் மனைவியிடம் கடும் வாக்குவாதம் செய்தார். பின்னர் கணவன் மனைவி இருவரும் தூங்கி விட்டனர்.

எனினும் ஆத்திரத்தில் இருந்த ஸ்ரீதர் மனைவியை கொலை செய்ய திட்டமிட்டார். அதிகாலை 4 மணிஅளவில் எழுந்த ஸ்ரீதர் தூங்கிக்கொண்டு இருந்த மனைவி செல்வராணியின் தலையில் அருகில் கிடந்த அம்மிக்கல்லை தூக்கிப்போட்டார். இதில் தலைநசுங்கி சம்பவ இடத்திலேயே செல்வராணி துடிதுடித்து இறந்தார். சத்தம் கேட்டு எழுந்த அவர்களது குழந்தைகள் தாய் கொலை செய்யப்பட்டு கிடப்பதை கண்டு பயத்தில் அலறினர். இதைத் தொடர்ந்து ஸ்ரீதர் போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு மனைவியை கொலை செய்து விட்டதாக தெரிவித்தார். தகவல் அறிந்ததும் வாலாஜாபாத் போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரபாகர், சாலவாக்கம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கிஷோர்குமார் மற்றும் போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். எடமச்சி பஸ் நிறுத்தம் அருகே நின்ற ஸ்ரீதரை போலீசார் கைது செய்தனர். கொலையுண்ட செல்வராணியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். விசாரணையில் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு கொலை செய்ததாக ஸ்ரீதர் போலீசாரிடம் தெரிவித்து உள்ளார். கொலைக்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்றுபோலீசார்விசாரித்து வருகிறார்கள். நடத்தை சந்தேகத்தில் தூங்கிய மனைவி மீது அம்மிக்கல்லை போட்டு கணவர் கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சங்கராபுரம் அருகே பணம் திருடிய வாலிபர் கைது

கள்ளக்குறிச்சி, செப். 2

போலீசார் வடமாமாந்தூர்பகுதியில்தீவிரவாகன சோதனையில் ஈடுபட்டனர். சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் இன்ஸ்பெக்டர் பாண்டியன், சப். இன்ஸ்பெக்டர்கள் சிவச்சந்திரன், இளங்கோவன் மற்றும் குற்றப்பிரிவு போலீசார் வடமாமாந்தூர் பகுதியில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த வாலிபர் ஒருவரை போலீசார் சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்தனர். இதில் அவர் கண்டாச்சிபுரம் அடுத்த தாங்கல் பகுதியை சேர்ந்த முருகன் மகன் கார்த்தி(20) என்பது தெரியவந்தது. இவர் தனது நண்பரான சென்னையை சேர்ந்த பால்ராஜ் உள்பட 2 பேருடன் சேர்ந்து வடமாமாந்தூர் பகுதியை சேர்ந்த மெல்கியோர்(68) என்பவரது வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்த ரூபாய் 4 ஆயிரம் பணம் மற்றும் செல்போனை திருடியது தெரிந்தது.

இதையடுத்து கார்த்தியை போலீசார்கைது செய்தனர். மேலும் பால்ராஜ் உள்ளிட்ட 2 பேரை தேடி வருகின்றனர்.

# நாகர்கோவிலில் கலைஞர் உரிமை திட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக கலெக்டர் ஆய்வு

நாகர்கோவில், செப். 2

அனைத்து துறை ஊழியர்களும் வீடு வீடாக சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். விண்ணப்பபடிவங்கள் உள்ள குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்து வழங்க பொது மக்களுக்கு அறிவுறுத்தினார்.



குமரி மாவட்டத்தில் கலைஞர்உரிமைதிட்டத்திற் கான விண்ணப்ப படிவங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு அந்த விண்ணப்ப படிவங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் 4 லட்சத்து 19 ஆயிரம் பேர் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வழங்கியுள்ளார்கள். இந்த விண்ணப்ப படிவங்களில் ஒரு சில விண்ணப்ப படிவங்களில் குறைபாடுகள் இருந்ததையடுத்து அந்த விண்ணப்ப படிவங்களை கள ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரேஷன் கடை ஊழியர்கள், வருவாய்த்துறை ஊழியர்கள், பொதுப்பணித்துறை, சுகாதாரத்துறை உட்பட அனைத்து துறை ஊழியர்களும் வீடு வீடாகசென்றுகளஆய்வு மேற் கொண்டு வருகிறார்கள்.

இந்தநிலையில்கலெக்டர் ஸ்ரீதர் கலைஞர் உரிமை திட்ட விண்ணப்பபடிவங்கள்ஆய்வு தொடர்பாக நேரில் ஆய்வு மேற்கொண்டார். நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வயல் தெரு, இருளப்பபுரம் வட்டவிளை, வேதநகர், தாமஸ் நகர் பகுதிகளில் வீடு வீடாக சென்று ஆய்வு செய்தார். பூர்த்தி செய்து வழங்கப்பட்ட விண்ணப்பபடிவங்கள் உள்ள குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்து வழங்க பொது மக்களுக்கு அறிவுறுத்தினார்.

# மகளிர் உரிமைத்தொகை திட்ட விண்ணப்பம் சரிபார்க்கும் பணி

கரூர், செப். 2

மகளிர் உரிமைத் தொகை திட்ட விண்ணப்பம் சரிபார்க்கும் பணி நடந்தது. கலெக்டர் பிரபு சங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கரூர் அரவக்குறிச்சி, கடவூர் ஆகிய வட்டத்திற்குட்பட்ட தடாகோவில், புங்கம்பாடி மேல்பாகம், காமராஜர் நகர், பள்ளப்பட்டி அப்பீஸ் நகர், ஷாநகர், சீத்தப்பட்டி, தரகம்பட்டி ஆகிய பகுதிகளில் மகளிர் உரிமைத்தொகை திட்ட விண்ணப்ப ங்களை களப்பணியாளர்கள் வீடு வீடாக நேரில் சென்று சரிபார்க்கும் பணியினை கலெக்டர் பிரபு சங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். களப்பணியாளர்கள்வீடுகளுக்கு நேரில் சென்று ஆதார் எண், மின் கட்டணம், குடும்ப அட்டையில் உள்ள குடும்ப உறுப்பினர்களின் விவரம், சொந்தமாக வைத்திருக்கும் வாகனங்களின் விவரம் ,மேலும் ஆண்டு வருமானம் தொடர்பான விவரங்களை சேகரித்து அதற்கான தனிச்செயலியில் பதிவேற்றம் செய்யப்படும் இப்பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளை பார்வையிட்டு களப்பணியாளர்களிடம் தங்களுக்குஒருநாளைக்கு எத்தனை மனுக்களை விசாரிக்க வேண்டும் என்ற பட்டியலை நாள்தோறும் தேர்வு செய்து பணிகளை விரைவாக வும், சரியான விவரங்க ளையும் செயலியில் பதிவேற்றம் செய்ய களப்பணியாளர்களுக்கு ஆலோசனைகளை கலெக்டர் வழங்கினார்.



## ஜெயிலர் வெற்றி இயக்குனர் நெல்சனுக்கும் காசோலை கொடுத்த கலாநிதி மாறன்

ரஜினிகாந்த நடிப்பில் நெல்சன் இயக்கிய திரைப்படம் ஜெயிலர். ஆகஸ்ட் 10ம் தேதி வெளியான ஜெயிலர் திரைப்படம் விமர்சன ரீதியிலும், வர்த்தக ரீதியிலும் அமோக வரவேற்பை பெற்றது. இதுவரை இந்த படம் ரூ. 525 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்து இருப்பதாக படத்தை தயாரித்த சன் பிக்சர்ஸ் நிறுவனம் தெரிவித்து இருக்கிறது.

இந்த நிலையில், ஜெயிலர் படம் வெற்றி பெற்றதை அடுத்து தயாரிப்பாளர் கலாநிதி மாறன் இயக்குனர் நெல்சன் திலிப்குமாரை நேரில் சந்தித்தார். மேலும் ஜெயிலர் வெற்றியை கொண்டாடும் வகையில், அவரிடம் காசோலை அளித்து பாராட்டு தெரிவித்து இருக்கிறார். இந்த புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகின்றன.




## சமூக வலைதளத்தில் வைரலாகும் கங்குவா புகைப்படம்

இயக்குனர் சிவா இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் திரைப்படம் 'கங்குவா'. ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தில் பாலிவுட் நடிகை திஷா பதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். 3டி முறையில் சரித்திர படமாக 10 மொழிகளில் வெளியாகவுள்ள இப்படத்திற்கு தேவி ஸ்ரீபிரசாத்இசையமைக்கிறார்.இப்படத்தின்படப்பிடிப்புவிறுவிறுப்பாகநடைபெற்று வருகிறது. இந்நிலையில், 'கங்குவா' படப்பிடிப்புதள புகைப்படம் வைரலாகி வருகிறது. அதாவது, 'கங்குவா' படப்பிடிப்புதளத்தில் நெருப்புக்கு நடுவே இயக்குனர் சிறுத்தை சிவா மற்றும் படக்குழு கேமராவுடன் நிற்கும் புகைப்படத்தை ரசிகர்கள் இணையத்தில் அதிகம் பகிர்ந்து வருகின்றனர்.



## முதல் இந்தி திரைப்படம்.. ஜவானுக்கு கிடைத்த பெருமை

அட்லீ இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'ஜவான்'. இப்படத்தின் மூலம் பாலிவுட் பட உலகில் அனிருத் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ளார்.



தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வரும் அட்லீ தற்போது இயக்கியுள்ள திரைப்படம் 'ஜவான்'. இதில் ஷாருக்கான் கதாநாயகனாக நடித்துள்ளார். நயன்தாரா கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் யோகிபாபு, தீபிகா படுகோனே, பிரியாமணி உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். இப்படத்தின் மூலம் பாலிவுட் பட உலகில் அனிருத் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ளார்.

பான் இந்தியா படமாக உருவாகியுள்ள 'ஜவான்' திரைப்படம் வருகிற செப்டம்பர் 7ந்தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இதையடுத்து இப்படத்தின் டிரைலர் வெளியாகி ரசிகர்களை கவர்ந்தது. இந்நிலையில், இப்படம் குறித்த புதியதகவல்வெளியாகியுள்ளது.அதன்படி,மும்பையின் புகழ்பெற்ற கெயிட்டி கேலக்ஸி (Gaeity Galaxy) திரையரங்கில் 'ஜவான்' திரைப்படம் காலை 6 மணி காட்சியாக திரையிடப்படுகிறது.

இவ்வாறு 6 மணிக்கு ரிலீசாகும் முதல் இந்தி திரைப்படம்என்றபெருமையைஜவான்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.



## விஜய்க்கு 'சூப்பர் ஸ்டார்' பட்டம் மீது ஆசை இல்லை ராகவா லாரன்ஸ்

இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகியுள்ள திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. இந்நிலையில், நடிகர் விஜய்க்கு 'சூப்பர் ஸ்டார்' பட்டம் மீது ஆசை இல்லை என்று ராகவா லாரன்ஸ் கூறியுள்ளார். நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட ராகவா லாரன்ஸ், "விஜய் சாருக்கு 'சூப்பர் ஸ்டார்' பட்டம் மீது ஆசை இல்லை. விஜய் அவராகவே ஜெயிக்க வேண்டும் என்று நினைப்பவர். நமக்கு நாம் தான் போட்டி என்று அவர் பல மேடைகளில் சொல்லியிருக்கிறார். விஜய்யிடம் நான் எப்போது பேசினாலும் தலைவர் எப்படி இருக்கிறார் என்று கேட்பார்" என்று பேசினார்.

## கேரளாவில் முதல் சொகுசு காரை வாங்கிய நடிகர் பகத் பாசில்



நடிகர்பகத்பாசில்,தமிழ்,மலையாளம் என பல படங்களில் நடித்து வருகிறார். இவர் நடிகை நஸ்ரியாவை கடந்த 2014 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

மலையாள திரையுலகின் முன்னணி நடிகரான பகத் பாசில் தன் தந்தை இயக்கிய 'கையெத்தும் தூரத்து' என்ற திரைப்படத்தின் மூலம் சினிமாவில் காலடியெடுத்து வைத்தார். பின்னர், பிரைட், பெங்களூர் டேஸ், டிரான்ஸ் போன்ற படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். இவர் தமிழில் 'வேலைக்காரன்', 'சூப்பர் டீலக்ஸ், விக்ரம் படங்களில் நடித்து தமிழ் ரசிகர்கள் மத்தியில் தனக்கான இடத்தை பிடித்தார். சமீபத்தில் மாரி செல்வராஜ் இயக்கத்தில் வெளியான மாமன்னன் படத்தில் இவர் நடித்திருந்த ரத்தினவேல் கதாபாத்திரம் பெரிதும் பேசப்பட்டது. சொகுசு கார் வாங்கிய பகத் பாசில் இவர் கடந்த 2014ஆம் ஆண்டு நடிகை நஸ்ரியாவை திருமணம் செய்து கொண்டார்.

இந்நிலையில், நடிகர் பகத் பாசில் அவர்களது திருமண நாளையொட்டி கேரளாவில் முதல் சொகுசு காரான 'land rover defender 90' என்ற காரை வாங்கியுள்ளார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

## பாகிஸ்தான் பந்துவீச்சு பலம் வாய்ந்தது: இந்திய பேட்ஸ்மேன்களுக்கு கங்குலி எச்சரிக்கை




ஆசிய கோப்பை 2023 கிரிக்கெட் தொடர் இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இதன் முதல் போட்டியில் பாகிஸ்தான் 238 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில், பாகிஸ்தானின் ஷதாப் கான் 4 விக்கெட் கைப்பற்றினார். ஷாஹீன் அஃப்ரிடி, ஹரிஷ் ராஃப் ஆகியோர் தலா 2 விக்கெட்டும், நசீம் ஷா மற்றும் முகமது நவாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினார். இதனையடுத்து பாகிஸ்தான் அணி 2வது போட்டியில் இந்தியாவிடம் நாளை மோதுகின்றன. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வீரர் ஷாஹீன் அஃப்ரிடி இந்திய பேட்ஸ்மேன்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பார் என்று பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இந்தியாவைப் போலவே அவர்களும் நல்ல வேகப்பந்து வீச்சாளர்களாக உள்ளனர் என்று இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலி கூறியுள்ளார். இது குறித்து சவுரவ் கங்குலி கூறியிருப்பதாவது: பாகிஸ்தானுக்கு மிகச் சிறந்த பந்துவீச்சு தாக்குதல் உள்ளது. நசீம் ஷா, அப்ரிடி மற்றும் ஹாரிஸ் ரவ்ஃப். இந்தியாவைப் போலவே அவர்களும் நல்ல வேகப்பந்து வீச்சாளர்களாக உள்ளனர். எனவே அவர்கள் ஒரு சிறந்த பந்துவீச்சு தாக்குதல் மற்றும் இந்தியா அவர்களுக்கு எதிராக நன்றாக பேட்டிங் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். கடந்த 2021ம் ஆண்டு நடந்த டி20 உலகக் கோப்பை தொடரில் ஷாஹீன் அஃப்ரிடி இந்திய வீரர்களான விராட் கோலி, ரோகித் சர்மா, கேஎல் ராகுல் ஆகியோரது விக்கெட்டை வீழ்த்தி பாகிஸ்தானின் வெற்றிக்கு காரணமாக அமைந்தார்.

## கேஎல் ராகுல் இல்லை.. பாகிஸ்தானுக்கு எதிராக விக்கெட் கீப்பர் யார்? ஐசிசி கூறும் விதி என்ன?




ஆசிய கோப்பை 2023 கிரிக்கெட் தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. முதல் போட்டியில் பாகிஸ்தானும், 2வது போட்டியில் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளன. இதையடுத்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3வது லீக் போட்டி நாளை பல்லேகலே மைதானத்தில் நடக்க இருக்கிறது. இதற்காக இரு அணி வீரர்களும் இலங்கையில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் முதல் 2 போட்டிகளில் (பாகிஸ்தான் மற்றும் நேபாளம்) கேஎல் ராகுல் விளையாடமாட்டார் என்று தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட் அறிவித்திருந்தார். அவருக்குப் பதிலாக இந்திய அணியில் இஷான் கிஷான் இடம் பெற அதிக வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது. சஞ்சு சாம்சன் இடம் பெற வாய்ப்புகள் கிடையாது. அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் சஞ்சு சாம்சன் பேக்கப் வீரராக அணியில் இடம் பெற்றிருக்கிறார். அவரை அணியில் சேர்க்க வேண்டும் என்றால், யாராவது ஒருவரை அணியிலிருந்து நீக்க வேண்டும். அல்லது யாரேனும் ஒருவருக்கு காயம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதோடு, அதற்கான சான்றிதழும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தற்போது கேஎல் ராகுலை அணியிலிருந்து நீக்கினால் மட்டுமே சஞ்சு சாம்சனை அணியில் விளையாட வைக்க முடியும். ஆனால், கேஎல் ராகுல் தான் அணியின் முதன்மை விக்கெட் கீப்பர் என்பதால், அவரை அணி நிர்வாகம் நீக்காது. இரண்டு போட்டிகள் வரையில் இஷான் கிஷான் தான் அணியில் இடம் பெற வாய்ப்புகள் இருக்கிறது. இரண்டு போட்டிகளுக்குப் பிறகும் கூட கேஎல் ராகுல் இடம் பெறவில்லை என்றால், சஞ்சு சாம்சன் அணியில் இடம் பெற அதிக வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக, இஷான் கிஷான் அணியில் இடம் பெற்றால், அவர் 3 ஆவது வீரராககளமிறங்கஅதிகவாய்ப்புகள்இருக்கிறது.சுப்மன்கில்3வதுஇடத்தில்களமிறங்கிசரியானபேட்டிங்கை வெளிப்படுத்தவில்லை. ஆதலால், ரோகித் சர்மா மற்றும் சுப்மன் கில் இருவரும் தொடக்க வீரர்களாக களமிறங்குவார்கள். இஷான் கிஷான் 3வது இடத்திலும், விராட் கோலி 4வது இடத்திலும், ஷ்ரேயாஸ் ஐயர் 5வது இடத்திலும் களமிறங்குவார்கள். இவர்களைத் தொடர்ந்து ஹர்திக் பாண்டியா, ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ்,முகமதுசிராஜ்,முகமதுஷமி,ஜஸ்ப்ரித்பும்ராஆகியோர்இடம்பெறுவார்கள்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேச கிரிக்கெட்டில் 2வது முறையாக அறிமுகம்: மஹிகா கவுர் சாதனை




12வயதில்சர்வதேசஅரங்கில்அறிமுகமானகிரிக்கெட் வீராங்கனை மஹிகா கவுர். இவர் 12வது வயதில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்காக முதல் முறையாக அறிமுகமானார். அவர் அந்த அணிக்காக 19 டி20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இந்நிலையில் அவர் சர்வதேச கிரிக்கெட்டில் 2வது முறையாக அறிமுகமாகிஉள்ளார்.ஆனால்இந்தமுறைஇங்கிலாந்து அணிக்காக அறிமுகமாகியுள்ளார். நேற்று இங்கிலாந்து மற்றும்இலங்கைஅணிகள்மோதின.இந்தபோட்டியில் மஹிகா கவுர் இலங்கைக்கு எதிராக இங்கிலாந்து அணிக்காக அறிமுகமானார். முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 186 ரன்கள் குவித்தது.

இதனையடுத்து களமிறங்கிய இலங்கை அணி 6 ஓவரில் 3 விக்கெட்டுகளை இழந்து 55 எடுத்திருந்தது. அப்போது மழை பெய்ததால் ஆட்டம் மீண்டும் தொடங்க முடியவில்லை. இதனால் இங்கிலாந்து 12 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இடது கை வேகப்பந்து வீச்சாளரான மஹிகா கவுர் தனது முதல் சர்வதேச விக்கெட்டையும் இந்த போட்டியின் மூலம் கைப்பற்றினார்.

## சர்வதேச கிரிக்கெட்டில் முதல் திருநங்கை சாதனை படைக்கும் கனடா அணி




கனடாவின் தேசிய மகளிர் அணியில் இடம் பெற்றுள்ள டேனியல் மெக்காஹே சர்வதேச கிரிக்கெட்டில் முதல் திருநங்கை என்ற சாதனையை படைத்துள்ளார். அமெரிக்காவில் இம்மாதம் 4 முதல் 11ம் தேதி வரை நடைபெறும் 2024 மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச்சுற்று போட்டியில் இவர் களமிறங்க உள்ளார். ஆஸ்திரேலியாவை சேர்ந்த மெக்காஹே கடந்த 2020ல் அந்த நாட்டிலிருந்து கனடாவுக்கு இடம்பெயர்ந்தார். 2021ல் தனது பாலினத்தை ஆணிலிருந்து பெண்ணாக மாற்றிக் கொண்டார்.

## சர்வதேச அளவில் 8வது இடம்: இந்தியாவின் நம்பர் ஒன் செஸ் வீரர் ஆனார் குகேஷ்



தமிழகத்தை சேர்ந்த செஸ் வீரர் குகேஷ், இந்தியாவின் நம்பர் ஒன் செஸ் வீரராக அதிகாரப்பூர்வமாக ஆனார். கடந்த மாதம் சர்வதேச செஸ் கூட்டமைப்பின் தரவரிசை பட்டியலில் (லைவ் ரேட்டிங்) 17 வயதான குகேஷ் 2755.9 புள்ளிகளுடன் 9வது இடத்தை பிடித்து விஸ்வநாதன் ஆனந்தை (2754 புள்ளி) முந்தினார். இதன் மூலம் செப்டம்பர் 1ந் தேதி வெளியிடப்படும் தர வரிசை பட்டியலில் விஸ்வநாதன் ஆனந்தை தொடர்ந்து குகேஷ் முந்தி இருந்தால் இந்தியாவின் நம்பர் ஒன் வீரராக ஆவார் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி இன்று சர்வதேச செஸ் கூட்டமைப்பு சார்பில் லைவ் ரேட்டிங் தர வரிசை பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் சமீபத்தில் உலக கோப்பை செஸ் போட்டியில் கால் இறுதி வரை முன்னேறிய குகேஷ் 2758 புள்ளிகளுடன் 8வது இடத்தை பிடித்தார். முன்னாள் உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் 2754 புள்ளிகளுடன் 9வது இடத்தில் உள்ளார். இதன் மூலம் குகேஷ் 37 ஆண்டுகளாக இந்தியாவின் நம்பர் ஒன் இடத்தில் இருந்த விஸ்வநாதன் ஆன்ந்தை முந்தி அந்த இடத்தை அதிகாரப்பூர்வமாகபிடித்தார்.உலககோப்பைசெஸ்போட்டியில்2ம்இடம்பிடித்ததமிழகத்தின்பிரக்ஞானந்தா சர்வதேச அளவில் 19வது இடத்தில் உள்ளார். இந்திய அளவில் 3வது இடத்தில் உள்ளார். இந்திய செஸ் தரவரிசையில் முதல் 3 இடங்களில் தமிழக வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.